## May 7, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1.தென் கொரியாவுடன் இனி எக்காலத்திலும் இணையப் போவதில்லை என்ற கொள்கையை உறுதிப்படுத்தும் வகையில், வடகொரியா தனது அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

(i) கொரிய தீபகற்பத்தின் அங்கமான இவ் விரு நாடுகளும் தனித்தனி இறையாண்மை கொண்ட தேசங்கள் என்றும், தென் கொரியா தனது நாட்டின் 'முதன்மை எதிரி' என்றும் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் அறிவித்திருந்த நிலையில், தற்போது அது சட்டபூர்வமாக அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. வடகொரிய நாடாளுமன்றமும் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ii) திருத்தப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின்படி, வட கொரியாவின் நிலப்பரப்பு என்பது வடக்கே சீனா மற்றும் ரஷியாவையும், தெற்கே தென் கொரியாவையும் எல்லையாகக் கொண்டது என வரையறுக்கப்பட்டுள்ளது.

(iii) இதற்கு முன்னதாக, கொரிய தீபகற்பம் முழுவதும் ஒரே தேசமாகக் கருதப்பட்டு வந்த நிலையில், முதல் முறையாக தனது தெற்கு எல்லையை வடகொரியா தனித்து அடையாளப்படுத்தியுள்ளது.

(iv) இருப்பினும் கடல்சார் எல்லைகளில் நிலவும் சிக்கல்கள் காரணமாக, ஜப்பான்-கொரிய தீபகற்பம் இடையிலான மஞ்சள் கடல் பகுதியில் உள்ள சர்ச்சைக்குரிய எல்லைக்கோடுகள் குறித்து இதில் தெளிவான விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை.

(v) இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் கிம் ஜோங் உன்னின் அதிகாரமும் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இனி அவரின் பதவி 'நாட்டின் தலைவர்' (ஹெட்ஆஃப்ஸ்டேட்) என மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம், சர்வதேச அளவில் வட கொரியாவின் அதிகாரபூர்வ பிரதிநிதியாக அவர் அங்கீகரிக்கப்படுகிறார்.

(vi) பாதுகாப்பு தொடர்பான பிரிவில், வட கொரியா ஒரு 'பொறுப்புள்ள அணு ஆயுத நாடு' என்று விவரிக்கப்பட்டுள்ளது. மக்களையும், வளர்ச்சி உரிமைகளையும் பாதுகாக்கவும், போரைத் தடுத்து பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதியை நிலைநாட்டவும் அணு ஆயுத மேம்பாடு தொடரும் எனக் கூறப்பட்டுள்ளது.

(vii) மேலும், நாட்டின் ஒட்டு மொத்த அணு ஆயுதப் படைகளையும் வழிநடத்தும் அதிகாரம் கிம் ஜோங் உன் வசம் மட்டுமே இருக்கும் என்பதும் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது.

2. தில்லியில் வரும் ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 2 வரை நடைபெறவுள்ள காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில், 35-க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்கேற்கின்றனர்.

3. இந்தியா - பாகிஸ்தான் இடையேயான இருதரப்பு விளையாட்டு போட்டிகளுக்கான தடை தொடரும் என்றும், சர்வதேச போட்டிகளுக்காக பாகிஸ்தான் வீரர், வீராங்கனைகள் இந்தியா வருவதற்கு எந்தத் தடையும் இல்லை என்றும் மத்திய விளையாட்டு அமைச்சகம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

4. இந்தியா-சுரிநாம் உறவு குடும்பப் பிணைப்பில் வேரூன்றியுள்ளதாக வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

(i) ஒன்பது நாள் பயணமாக கரீபியன் நாடுகளான ஜமைக்கா, சுரிநாம், டிரினிடாட் - டொபேகோவுக்கு பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், முதலில் ஜமைக்கா சென்றார். இதைத் தொடர்ந்து அவர் சுரிநாம் சென்றடைந்தார்.

(ii) அந்நாட்டு நாளிதழில் அவர் எழுதிய கட்டுரையில், 'இந்தியா-சுரிநாம் இடையிலான உறவு உள்கட்டமைப்பு, வர்த்தகம், பண்பாட்டுத் தொடர்புகளை உள்ளடக்கிய வலுவான, பன்முகத்தன்மை கொண்ட உறவாக விரிவடைந்துள்ளது.

(iii) சுரிநாமில் பல வளர்ச்சித் திட்டங்கள் இந்தியாவின் கடனுதவியுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளன. சுரிநாமின் உணவுப் பாதுகாப்புக்காக கடந்த ஆண்டு 10 மில்லியன் டாலர் (சுமார் ரூ.94.32 கோடி) மதிப்பு கொண்ட 425 மெட்ரிக் டன் உணவுப் பொருள்களை இந்தியா விநியோகித்தது.

(iv) ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் உள்பட பல விவகாரங்களில் இந்தியா-சுரிநாமின் நிலைப்பாடு ஒன்றாகவே இருந்துள்ளது.

5. தமிழக அரசியல் வரலாற்றில் இதுவ

வரையில் இல்லாத குழப்பம் உருவாகி இருக்கிறது. இதற்கு முன்னர், முதலாவது சட்டப்பேரவையில் காங்கிரஸ் கட்சிக்குத் தனிப்பெரும்பான்மை இல்லாமல் இருந்தபோதுகூட இதுபோன்ற திரிசங்கு நிலைமை ஏற்படவில்லை.

(i) 1952-இல் கவர்னர் ஜெனரலாக இருந்து பணி ஓய்வு பெற்று திருக்குற்றாலத்தில் தனது நண்பர் 'ரசிகமணி' டி.கே. சிதம்பரநாத முதலியார் வீட்டில் தங்கியிருந்த ராஜாஜியை அழைத்து வந்து முதல்வராக்கித் தனது பெரும்பான்மையை காங்கிரஸ் நிரூபிக்க முடிந்தது.

(ii) 1987-இல் முதல்வராக இருந்த எம். ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு அதிமுகவில் பிளவு ஏற்பட்ட போதுகூட, வி.என். ஜானகி தலைமையில் அமைச்சரவை அமைந்து, பெரும்பான்மையை நிரூபிக்க முடியாததால் ஆட்சி கவிழ்ந்து ஆளுநர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. அப்போது எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸும், திமுகவும் ஜானகி ஆட்சிக்கு எதிராக வாக்களித்ததால் பெரும்பான்மை பெறமுடியவில்லை.

(iii) நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம், நடந்து முடிந்த தேர்தலில் களமிறங்கி முதல் தேர்தலிலேயே 34.92% வாக்குகள் பெற்றுப் பரவலான ஆதரவைப் பெற்றாலும்கூட, முன்பு 1967-இல் அண்ணா துரை தலைமையில் திமுக, 1977-இல்எம். ஜி.ஆர். தலைமையில் அதிமுக போலத் தனிப்பெரும்பான்மை பெறும் அளவிலான வெற்றியைப் பெற முடியவில்லை. எந்தவொரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை இல்லாத நிலையில் தமிழ்நாடு முதல்முறையாக தொங்கு சட்டப்பேரவையைச் சந்தித்து இருக்கிறது.

(iv) ஆளுநர் என்ன செய்யலாம்?

- எந்தவொரு கட்சிக்கோ, கூட்டணிக்கோ தனிப்பெரும்பான்மை இருந்தால் அரசியல் சாசனப் பிரிவு 164(1)-இன் கீழ் ஆளுநர் அதன் தலைவரை முதல்வராகப் பதவிப் பிரமாணம் செய்துவைத்து, அவரது ஆலோசனைப்படி அமைச்சரவை சகாக்களையும் நியமிக்க வேண்டும். எந்தவொரு கட்சிக்கோ, கூட்டணிக்கோ பெரும்பான்மை இல்லாத நிலையில் மட்டுமே ஆளுநர் சுயமாக முடிவெடுக்கலாம்.
- அவையில் தனது பெரும்பான்மையை நிரூபிப்பார் என்று ஆளுநர் கருதினால், கட்சியின் அல்லது கூட்டணியின் தலைவரைப் பெரும்பான்மை இல்லாத நிலையிலும் முதல்வராக நியமிக்கலாம். அவர்கள் குறிப்பிட்ட காலவரையில் தங்களது பெரும்பான்மையை நிரூபிக்க அவகாசம் வழங்க ஆளுநருக்கு உரிமை உண்டு.
- யாருக்கும் தனிப்பெரும்பான்மை இல்லாத நிலையில், மரபுகள், முன்னுதாரணங்கள், சர்க்காரியா கமிஷன் பரிந்துரை ஆகியவற்றின் அடிப்படையில் அதிக எண்ணிக்கை பலமுள்ள கட்சி அல்லது கூட்டணிக்குத் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வாய்ப்பளிக்க வேண்டும். ஆனால், அது குதிரை பேரத்துக்கும், கட்சிப் பிளவுகளுக்கும் வழிகோலுமானால் அதைத் தவிர்க்கும் உரிமை ஆளுநருக்கு உண்டு.
- ஆளுநரின் அடிப்படைக் கடமை நிலையான ஆட்சி அமைக்கப்படுவதுதான். அதற்கேற்ப முடிவுகள் எடுக்கும் உரிமையை அரசியல் சாசனம் ஆளுநருக்கு வழங்குகிறது. சட்டப்பேரவை உறுப்பினர் அல்லாத, எந்தக் கட்சியையும் சாராத ஒருவரால் நிலையான ஆட்சியை வழங்க முடியும் என்று ஆளுநர் கருதினால் அவரை முதல்வராக நியமித்து, குறிப்பிட்ட கால அளவில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வாய்ப்பளிக்கும் உரிமையும் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

6.16-ஆவது தமிழ்நாடு சட்டப்பேரவையைக் கலைக்க ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் ஒப்புதல் அளித்தார். இது குறித்த ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக குறிப்பு:

(i) தமிழக ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் 16-ஆவது தமிழ்நாடு சட்டப்பே ரவையை 2026-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் தேதி முதல் கலைக்க உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) மே 10 - இல் நிறைவு: 16-ஆவது சட்டப்பேரவைக்கு கடந்த 2021 ஏப். 6 -ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது. 2021 மே 7 -ஆம் தேதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்றது. பின்னர் 16-ஆவது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் 2021 மே 11-ஆம் தேதி கூடியது.

(iii) அதன்படி பேரவையின் ஆயுள் 2026, மே 10-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. தற்போது 17-ஆவது சட்டப்பேரவைக்கு புதிதாக உறுப் பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதனால், 16- ஆவது சட்டப்பேரவையைக் கலைக்க ஆளுநர் உத்தரவை வெளியிட்டுள்ளார்.

7. இந்தியா-வியத்நாம் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தின் மதிப்பை 2030-ஆம் ஆண்டுக்குள் 25 பில்லியன் டாலராக

(ரூ.2.36 லட்சம் கோடி) அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(i) தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வியத்நாம் அதிபர் டோ லாம் நடத்திய விரிவான பேச்சுவார்த்தையில் இந்த முக்கிய முடிவு மேற்கொள்ளப்பட்டது.

(ii) அத்துடன், அரிய புவி கனிமங்கள், மருந்துகள், கல்வி, வங்கித் துறை, கலாசாரம், எண்ம பரிவர்த்தனைகள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த 13 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

(iii) வியத்நாம் அதிபர் டோலாம் மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வருகை தந்தார். கடந்த ஏப்ரலில் அதிபராக பதவியேற்ற டோ லாம், இந்தியாவுக்கு முதல் முறையாக அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

(iv) தில்லியில் பிரதமர் மோடியை சந்தித்த அவர், இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். புவி-அரசியல் பதற்றங்களுக்கு இடையே வர்த்தகம், பாதுகாப்பு, அரிய கனிமங்கள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து இருவரும் விரிவாக விவாதித்தனர்.

(v) 13 ஒப்பந்தங்கள் கையொப்பம்:

- மேலும், தென்சீன கடல் பகுதியில் சீனா ஆதிக்கம் செலுத்த சீனா முயன்று வரும் சூழலில், இந்திய-பசிபிக் பிராந்திய நிலவரம் தொடர்பாக ஆலோசித்த அவர்கள், இந்தப் பிராந்தியத்தில் சட்டத்தின் ஆட்சி, அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் வளமைக்கு தொடர்ந்து பங்களிக்க ஒப்புக் கொண்டனர்.
- பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, எண்மப் பரிவர்த்தனை, அரிய புவி கனிமங்கள், மருந்துகள், கல்வி, வங்கித் துறை, கலாசாரம் பாரம்பரிய மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்தும் 13 ஒப்பந்தங்கள், இரு தலைவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டன.

(vi) விரிவான உத்திசார் கூட்டுறவு:

பின்னர், செய்தியாளர்களுக்கு கூட்டாக அளித்த பேட்டியில் பிரதமர் மோடி கூறியதாவது:

- இந்தியாவின் கிழக்கு நோக்கி செயல்பாட்டுக் கொள்கையில் முக்கியத் தூண் வியத்நாம்.
- 10 ஆண்டுகளுக்கு முன்பு, ஆசியான் கூட்டமைப்பில் இருந்து இந்தியாவின் விரிவான உத்திசார் முதல் கூட்டாளியாக வியத்நாம் மாறிய பிறகு இருதரப்பு உறவுகள் விரைவாகவும், விரிவாகவும் வளர்ந்துள்ளன.
- இந்த வலுவான அடித்தளத்தின் மீது இருதரப்பு உறவுகள் இப்போது மேம்பட்ட விரிவான உத்திசார் கூட்டுறவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பாதுகாப்பு, நிலையான வளர்ச்சி, விநியோக சங்கிலி மீட்சி, கலாசாரம், போக்குவரத்து, திறன் கட்டமைப்பு என ஒவ்வொரு துறையிலும் இருதரப்பு ஒத்துழைப்பு புதிய உச்சங்களை எட்டும்.

(vii) 25 பில்லியன் டாலர் வர்த்தக இலக்கு:

- இருதரப்பு வர்த்தக மதிப்பு கடந்த 10 ஆண் டுகளில் 16 பில்லியன் டாலராக இரு மடங்கு உயர்ந்துள்ளது. 2030-ஆம் ஆண்டுக்குள் 25 பில்லியன் டாலராக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- மருந்து துறையில் கையொப்பமாகியுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ், இந்திய பாரம்பரிய மருந்துகள் இனி வியத்நாமில் கிடைக்கப் பெறும். இந்தியா-ஆசியான் இடையிலான வர்த்தக ஒப்பந்தத்தை நடப்பாண்டு இறுதிக்குள் புதுப்பிக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் வியத்நாம் நாட்டுக்கான இந்திய வேளாண் பொருள்கள், மீன்கள் உள்ளிட்டவை ஏற்றுமதி எளிதாகும். இந்திய திராட்சை மற்றும் மாதுளைகளை வியத்நாம் மக்கள் விரைவில் ருசிப்பார்கள். அரிய கனிமங்கள், எரிசக்தித் துறை ஒத்துழைப்பால், இரு நாடுகளின் பொருளாதார பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றார் அவர்.

(viii) எண்ம பரிவர்த்தனை தளங்கள் இணைப்பு

- இருதரப்பு நிதிசார் பிணைப்பை ஊக்குவிக்கும் வகையில், இந்தியாவின் யுபிஐ மற்றும் வியத்நாமின் விரைவு பரிவர்த்தனை அமைப்புமுறை விரைவில் இணைக்கப்படும்.
- பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு கடும் கண்டனத்தைப் பதிவு செய்ததற்காகவும், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்தியாவுக்கு துணை நிற்பதற்காகவும் வியத்நாமுக்கு நன்றி.

- உலகளாவிய கொந்தளிப்பு மற்றும் பொருளாதார சவால்கள் நிறைந்த இந்த சகாப்தத்தில், திறமை - நல்லாட்சி- பொருளாதார சீர்திருத்தங்களின் உதவியுடன் உலகின் வேகமாக வளரும் பொருளாதாரங்களாக இந்தியாவும், வியத்நாமும் விளங்குகின்றன' என்றார். பிரதமர் மோடி.

8. இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், பள்ளி கல்வியின் தற்போதைய நிலை குறித்த ஆய்வு

- இந்தியா முழுவதும், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைந்து வரும் அதே வேளையில், தனியார் பள்ளிகளில் சேர்க்கை அதிகரித்து வருகிறது. பல அரசுப் பள்ளிகள் ஒரே ஆசிரியர் அல்லது இரண்டு ஆசிரியர்களை மட்டுமே கொண்ட நிறுவனங்களாகச் சுருங்கி வருகின்றன; சில பள்ளிகள் முற்றிலுமாக மூடப்பட்டு வருகின்றன.
- மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களின் கூற்றுப்படி, நாடு முழுவதும் 89,441 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. குறிப்பாகத் தமிழ்நாட்டில், 2025–26 கல்வியாண்டில் 210 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டன; மேலும் 2024–25 கல்வியாண்டில், 1,204 பள்ளிகளில் மாணவர் சேர்க்கை ஏதுமில்லை (பூஜ்ஜியம்) என்று பதிவாகியுள்ளது.
- மாணவர்கள் தனியார் பள்ளிகளை நோக்கித் திரும்புவதற்கான ஒரு முக்கிய காரணம், அரசுப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் இல்லாததே ஆகும். போதிய கட்டிட வசதி இன்மை, குடிநீர் வசதி இன்மை, மேசைகள், நாற்காலிகள், மின்சாரம், மின்விசிறிகள் மற்றும் கழிப்பறை வசதிகள் இன்மை ஆகியவை இதில் அடங்கும்.
- நிதிப் பற்றாக்குறை: கல்விக்காக இந்தியா ஒரு மாணவருக்குச் செய்யும் முதலீடு, அதன் அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாகவே உள்ளது. வங்கதேசம் ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு 2,600 டாலரும், சீனா 17,000 டாலரும் செலவிடும் நிலையில், இந்தியா ஒரு மாணவருக்கு வெறும் 260 டாலர் மட்டுமே செலவிடுகிறது.
- மாணவர்களின் மொழித் திறன்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகிறது; தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் ஆங்கில மொழியில் தடுமாறுகின்றனர்; அதே வேளையில், ஆங்கில வழியில் பயிலும் மாணவர்கள் தமிழ் இலக்கணம் மற்றும் எழுத்துக்கூட்டலில் தடுமாறுகின்றனர்.

(i) ஒப்பீட்டுப் புள்ளிவிவரங்கள்: தமிழ்நாடு எதிர் உலகளாவிய தரநிலைகள்

பள்ளி நேரம் (தினசரி):

- தமிழ்நாடு: சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக உள்ளது.
- தாய்லாந்து: 9.5 மணிநேரம்.
- கம்போடியா: 8 மணிநேரம் 45 நிமிடங்கள்.
- சீனா: 12 முதல் 16 மணிநேரம் வரை.
- தென் கொரியா: 10 முதல் 14 மணிநேரம் வரை.

வேலை நாட்கள் (ஆண்டுக்கு):

- தமிழ்நாடு: 200 நாட்கள்.
- சீனா: 240 நாட்கள்.
- தென் கொரியா: 220 நாட்கள்.

இந்தியாவின் பொருளாதாரப் பகுப்பாய்வு அறிக்கைகளின்படி, பள்ளி கல்வியின் செயல்பாட்டில் கேரளா முதலிடத்திலும், தமிழ்நாடு இரண்டாம் இடத்திலும் உள்ளன.

(ii) வெற்றிக்கான வழிமுறைகள் மற்றும் பரிந்துரைகள்

- மாணவர்களை ஆரம்ப நிலையிலேயே ஈர்ப்பதற்காக, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மழலையர் மற்றும் நர்சரி வகுப்புகளைத் தொடங்க வேண்டும்.
- மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கவும், கல்வியின் தரத்தைத் தக்கவைக்கவும், தற்காலிகப் பணியாளர்களுக்குப் பதிலாக நிரந்தர ஆசிரியர்களை நியமிப்பது மிகவும் அவசியமாகும்.
- ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்துவதும், அங்கு எழும் முறைகேடுகளைத் தடுக்க அவற்றை முறையாகக் கண்காணிப்பதும் அவசியமாகும். ஏற்கனவே பணியில் உள்ள ஆசிரியர்கள், தங்களது கற்பித்தல் திறன்களை மேம்படுத்திக்கொள்ள தொடர்ச்சியான புத்துணர்வுப் பயிற்சிகளைப் பெற வேண்டும்.
- உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், உலகளாவிய செலவினத் தரங்களுக்கு இணையாகவும், கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அரசாங்கம் கணிசமாக அதிகரிக்க வேண்டும்.

- அடுத்த தலைமுறைக்காக பிராந்திய மொழி, வரலாறு மற்றும் கலாச்சாரத்தைக் கற்பிப்பதிலும் பாதுகாப்பதிலும் பாடத்திட்டம் கவனம் செலுத்த வேண்டும்.
- அரசுப் பள்ளிகளின் தரம் குறித்த பெற்றோரின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப, அரசாங்கமும் ஆசிரியர்களும் இணைந்து பணியாற்ற வேண்டும். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் முதல் சுந்தர் பிச்சை வரை, பெரும் சாதனையாளர்கள் அரசுப் பள்ளி அமைப்பின் விளைபொருட்களே என்று அது குறிப்பிடுகிறது.

9. இந்தியாவில் மூளைச் சாவுக்குப் பிந்தைய உறுப்பு தானம் தொடர்பான நெறிமுறைகள் மற்றும் நம்பகத்தன்மை குறித்த ஆய்வு.

(i) செல்வம், கல்வி நிலை அல்லது இருப்பிடம் ஆகிய வேறுபாடுகள் இன்றி—இந்தியா முழுவதும்—மூளைச் சாவுக்கு ஆளானவர்களின் உறுப்புகளை தானம் செய்வது குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. சாலை விபத்துகளின் காரணமாகவே பெரும்பாலான மூளைச் சாவு நிகழ்வுகள் ஏற்படுகின்றன என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

(ii) உயிர்களைக் காப்பாற்றும் உன்னத நோக்கத்துடன் குடும்பத்தினர் உறுப்புகளை தானம் செய்தாலும், அந்த உறுப்புகள் உண்மையில் தேவைப்படுபவர்களுக்கு இலவச சேவையாக வழங்கப்படுகின்றனவா அல்லது தனியார் மருத்துவமனைகளால் வணிகமயமாக்கப்படுகின்றனவா என்பது குறித்து விமர்சனங்களும் சந்தேகங்களும் அதிகரித்து வருகின்றன.

(iii) கேரளாவிலிருந்து எழுந்த சட்டரீதியான சவால்: கேரளாவைச் சேர்ந்த 78 வயது மருத்துவர் ஒருவர், 2017-ஆம் ஆண்டில் ஒரு பொதுநல வழக்கை (PIL) தாக்கல் செய்தார். சில மருத்துவமனைகள் உறுப்புகளைப் பெறுவதற்காகவே நோயாளிகளை முன்கூட்டியே 'மூளைச் சாவு' அடைந்ததாக அறிவிப்பதாக அவர் அதில் குற்றம் சாட்டியிருந்தார். அரசின் உறுதிமொழிகளின் அடிப்படையில் கேரள உயர் நீதிமன்றம் இவ்வழக்கை தள்ளுபடி செய்ததைத் தொடர்ந்து, அந்த மருத்துவர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

- உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள் (மே 2, 2026):
- நீதிபதி விக்ரம் நாத் மற்றும் நீதிபதி சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு, மூளைச் சாவு சான்றளிப்பு தொடர்பாக ஒரு முக்கிய உத்தரவைப் பிறப்பித்தது.
- புது தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தை (AIIMS), நரம்பியல் அல்லது நரம்பியல் அறுவை சிகிச்சை துறையைச் சேர்ந்த மூன்று நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியது.
- மூளைச் சாவை இன்னும் துல்லியமாக உறுதி செய்ய, தற்போதுள்ள 'அப்னியா சோதனை'க்கு (Apnea test) மாற்றாக, 'செரிப்ரல் ஆஞ்சியோகிராம்' (Cerebral Angiogram) மற்றும் 'எலக்ட்ரோஎன்செபலோகிராம்' (Electroencephalogram) போன்ற மேம்பட்ட முறைகளைப் பயன்படுத்தலாமா என்பதை அந்தக் குழு ஆய்வு செய்ய வேண்டும்.
- அந்தக் குழு தனது பரிந்துரைகளை இரண்டு மாதங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், இவ்வழக்கின் அடுத்த விசாரணை ஜூலை 21-ஆம் தேதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(iv) தற்போதைய அமைப்பில் உள்ள சிக்கல்கள்: தற்போது நடைமுறையில் உள்ள 'அப்னியா சோதனை' பெரும்பாலும் நம்பகத்தன்மையற்றதாக உள்ளது; மேலும், அந்தச் சோதனை உண்மையில் நடத்தப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லாத சூழலே பல நேரங்களில் நிலவுகிறது. அரசு மருத்துவமனைகள் மூளைச் சாவு சான்றளிப்பு நடைமுறையை வீடியோவில் பதிவு செய்யும் நிலையில், தனியார் மருத்துவமனைகள் பொதுவாக அவ்வாறு செய்வதில்லை; இது வெளிப்படைத்தன்மை இல்லாத நிலைக்கு வழிவகுக்கிறது.

(v) தேசிய மற்றும் உலகளாவிய புள்ளிவிவரங்கள்:

- உலகளாவிய தரவரிசை: உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையில் இந்தியா தற்போது உலக அளவில் 3-வது இடத்தில் உள்ளது.
- தேசிய அளவிலான தரவரிசை: தேசிய அளவில், உறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

(vi) அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைகள்:

- உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு மத்திய அரசு கோடிக்கணக்கான ரூபாயை நிதியாக வழங்குகிறது.

- தானமாகப் பெறப்பட்ட உறுப்புகள், பதிவு செய்யப்பட்ட காத்திருப்போர் பட்டியலின் அடிப்படையில் மட்டுமே கண்டிப்பாக விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யும் பொறுப்பு மாநில மற்றும் மத்திய அரசுகளுக்கு உள்ளது.
- பொதுமக்களின் நம்பிக்கையைப் பேண, கொடையளிக்கும் குடும்பங்களின் தன்னலமற்ற செயல் இலாபத்திற்காகச் சுரண்டப்படாமல் இருப்பதை அரசாங்கம் முழுமையான வெளிப்படைத்தன்மையின் மூலம் உறுதி செய்ய வேண்டும்